JUDICIAL FORM NO.53

( See Rule 42)
Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
IN THE COURT OFJUDICIAL MAGISTRATE, PERUNDURAI

| | | | |
|---|---|---|---|
| Calendar | | C.C.No. | 112/2015 |
| Miscellaneous | | C.M.P.No | |
| Sessions | | S T C No. | |
| Deposition of witness for | PW2 | Prosecution /Defence / Court | |
| Name | Ramasamy | Caste | |
| Father's Name | Perumal gounder | Calling | |
| Village | Pandiyan veethi, Bhavani road, | Religion | |
| Taluk | Perundurai | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act 1969( Central Act 44 of 1969 ) of the day of 23.08.2022

**முதல் விசாரணை**

1)நான் மேற்கண்ட விலாசத்தில் குடியிருந்து வருகிறேன். நான் முதலில் லாரி வைத்து தொழில் செய்து பெருந்துறை லாரி உரிமையாளர்கள் சங்கத்தில் 27 வருடங்களாக தலைவராக இருந்து தற்போது உடல்நிலை சரியில்லாத காரணத்தால் வேலைக்கு செல்லாமல் வீட்டில் தான் இருந்து வருகிறேன். அ.சா.1 ராமசாமி லாரி உரிமையாளர்கள் சங்கத்தில் துணை செயலாளராக இருந்த வகையில் அவரை எனக்கு தெரியும். திருவேங்கடம்பாளையம் கருமாண்டிசெல்லிபாளையம் கிராமத்தில் ஒன்றரை ஏக்கர் பூமி உள்ளதாகவும் அதை என்னை வாங்கி கொள்ளும்படி என்னிடம் கூறினார்.

2)நானும் சோமசுந்தரமும் நிலத்தை பார்க்கலாம் என 29.09.2010ம் தேதி காலை 10.30 மணி அளவில் அங்கு சென்று பார்த்துகொண்டிருந்தோம். அப்போது அங்கு குமரவேலும், அரவது மனைவியும், குமரவேலின் தம்பியும் குமரவேலின் அம்மாவும் அங்கு இருந்து எதற்கடா எங்களது காட்டிற்குள் வருகிறீர்கள் என சத்தம் போட்டார்கள். அப்போது குமரவேலின் மனைவி கையில் அரிவாள் வைத்திருந்தார். குமரவேல் எங்களை பார்த்து தாயோழிகளா காட்டிற்குள் வந்தால் கை, கால்களை வெட்டிபுடுவோம் என மிரட்டினார்.

3)அவ்வாறு மிரட்டி சத்தம் போட்டதை பார்த்து இந்த காட்டில் ஏதோ வில்லங்கம் இருப்பதாக நினைத்து கொண்டு நாங்கள் அங்கிருந்து வந்துவிட்டோம். இந்த சம்பவம் நடந்து 10-12 வருடம் ஆகிவிட்டதாலும் எனக்கு 75 வயதாகிவிட்டதாலும் இவ்வளவுதான் ஞாபகம் உள்ளது. இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

வாய்ப்பளித்தும் இல்லை.

Signature of the Witness

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
பெருந்துறை.

JUDICIAL FORM NO.53

( See Rule 42)
Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
IN THE COURT OFJUDICIAL MAGISTRATE, PERUNDURAI

| | | | |
|---|---|---|---|
| Calendar | | C.C.No. | 112/2015 |
| Miscellaneous | | C.M.P.No | |
| Sessions | | S T C No. | |
| Deposition of witness for | PW3 | Prosecution /Defence / Court | |
| Name | K.C.Subramanai | Caste | |
| Father's Name | Chenniyappa goudner | Calling | |
| Village | Karumandisellipalayam | Religion | |
| Taluk | Perundurai | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act 1969( Central Act 44 of 1969 ) of the day of 23.08.2022

<u>முதல் விசாரணை</u>

1)நான் மேற்கண்ட விலாசத்தில் குடியிருந்துகொண்டு பேக்கரி வைத்து தொழில் செய்து வருகிறேன். அ.சா.1 டி.பி.ராமசாமி என்னுடைய சம்பந்தி ஆவார். ஆஜர் எதிரி குமரவேல் எனது பக்கத்து ஊர்காரர். நான் நிலத்தை வாங்கி விற்கும் வேலையை பகுதி வேலையாகவும் நான் செய்து வருகிறேன். 2010 ம் வருடத்தில் ஒரு நாள் ஆஜர் எதிரி குமரவேலின் நிலத்தை விற்க போவதாக நான் கேள்விபட்டு நானும், எனது சம்பந்தியும், கே.பி.ராமசாமியும், இன்னொரு சுப்பிரமணியும், பெயர் தெரியாத இன்னொரு நபரும் விற்க போவதாக கூறும் நிலத்தை பார்ப்பதற்காக அன்று காலை 10 மணி அளவில் சென்று பார்த்துகொண்டிருந்தோம்.

2)அப்போது அங்கு ஆஜர் எதிரி குமரவேலும், அவரது மனைவியும், பெயர் தெரியாத இன்னொரு பெரியவரும், இன்னும் 2-3 நபர்களும் அங்கு இருந்தார்கள். அவர்களை பார்த்தால் தற்போது என்னால் அடையாளம் சொல்லமுடியும். (1,3,4 எதிரிகள் ஆஜரில் இல்லை. கு.வி.மு.ச. பிரிவு 317 ன் படி மனுதாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டுள்ளது).

3)அப்போது ஆஜர் எதிரியும் அரவது மனைவியும் கையில் அரிவாளை வைத்து கொண்டு எங்களை பார்த்து தாயோழிகளா எதற்கடா இங்கு வந்தீர்கள் என்று தகாத கெட்டவார்த்தையால் திட்டி கை, கால்களை

வெட்டிபுடுவேண்டா என மிரட்டினார்கள். அதன்பின்னர் பிரச்சணை உள்ள நிலத்தை வாங்க வேண்டாம் என நாங்கள் திரும்பி வந்துவிட்டோம். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

வாய்ப்பளித்தும் இல்லை.

Signature of the Witness

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
பெருந்துறை.

JUDICIAL FORM NO.53

( See Rule 42)
Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
IN THE COURT OFJUDICIAL MAGISTRATE, PERUNDURAI

| | | | |
|---|---|---|---|
| Calendar | | C.C.No. | 112/2015 |
| Miscellaneous | | C.M.P.No | |
| Sessions | | S T C No. | |
| Deposition of witness for | PW4 | Prosecution /Defence / Court | |
| Name | Eshwaran | Caste | |
| Father's Name | T.P.Ramasamy | Calling | |
| Village | Thiruvengadampalayam | Religion | |
| Taluk | Perundurai | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act 1969( Central Act 44 of 1969 ) of the day of 23.08.2022

**<u>முதல் விசாரணை</u>**

1)நான் மேற்கண்ட விலாசத்தில் குடியிருந்துகொண்டு லாரி வைத்து தொழில் செய்து வருகிறேன். அ.சா.1 ராமசாமி என்னுடைய அப்பா ஆவார். என்னுடைய அப்பா ஆஜர் எதிரி குமரவேல் மீதும் அவரது மனைவி ஸ்ரீவித்யா, குமரவேலின் அம்மா ருக்மணி மீதும், குமேரவேலின் சித்தப்பா காளியப்பன் மீதும் கொடுத்த புகாரின் பேரில் இந்த வழக்கு அவர்கள் மீது பதிவு செய்யப்பட்டுள்ளது. எதிரிகள் அனைவரும் எங்கள் ஊர்காரர்கள். கடந்த 29.09.2010 ம் தேதி காலை 10.30 மணிக்கு நான் காஞ்சிகோயில் ரோட்டில் உள்ள எங்களது காட்டில் நானும் எனது அப்பாவும், என்னுடைய அண்ணனின் மாமனார் கே.சி.சுப்பிரமணியம் ஆகிய மூவரும் இருந்தபோது காட்டை விற்கலாம் என இருந்தபோது அதை வாங்குவதற்காக காட்டை பார்க்க கே.பி.ராமசாமி, செல்லப்பன், சோமு ஆகியோர்கள் காட்டிற்குள் வந்தார்கள்.

2)அப்போது ஆஜர் எதிரி குமரவேலும், அவரது மனைவியும், அவரது அம்மாவும், அவரது சித்தப்பாவும் அவரது காட்டில் இருந்து ஓடி வந்து எங்களை பார்த்து எங்கள் காட்டிற்குள் எதற்கடா வருகிறீர்கள் என கூறினார்கள். அப்போது ஆஜர் எதிரி குமரவேலும், அரவது மனைவியும்

இருவரும் கையில் அரிவாளை வைத்து கொண்டு எங்களை பார்த்து தாயோழிகளா எதற்கடா காட்டிற்குள் வருகிறீர்கள் என கெட்டவார்த்தை பேசினார்கள். அப்போது குமரவேலின் மனைவி ஸ்ரீவித்யா சுடிதார் துப்பட்டாவை எடுத்து கொண்டு உங்களை சும்மா விடப்போவதில்லை. என்ன பன்னுகிறேன் என பாருங்கள் என கூறி செட்டிற்குள் ஓடினார்.

3)அப்போது கே.பி.ராமசாமியும், சோமு ஆகியோர்கள் போய் சமாதானம் செய்து நிலத்தை வாங்கவில்லை என கூறி சென்றுவிட்டார்கள். எங்களது நிலத்திற்குள் யாரையும் அழைத்து வர கூடாது என மிரட்டினார்கள். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

வாய்ப்பளித்தும் இல்லை.

Signature of the Witness

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
பெருந்துறை.

JUDICIAL FORM NO.53

( See Rule 42)
Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
IN THE COURT OFJUDICIAL MAGISTRATE, PERUNDURAI

| | | | |
|---|---|---|---|
| Calendar | | C.C.No. | 112/2015 |
| Miscellaneous | | C.M.P.No | |
| Sessions | | S T C No. | |
| Deposition of witness for | PW5 | Prosecution /Defence / Court | |
| Name | Sellappan | Caste | |
| Father's Name | Palanisamy | Calling | |
| Village | Thiruvengadampalayam | Religion | |
| Taluk | Perundurai | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act 1969( Central Act 44 of 1969 ) of the day of 23.08.2022

**முதல் விசாரணை**

1)நான் மேற்கண்ட விலாசத்தில் குடியிருந்துகொண்டு பருப்பு மில் வைத்து தொழில் செய்து வருகிறேன். அ.சா.1 ராமசாமி என்னுடைய பங்காளி ஆவார். திருவேங்கடம்பாளையத்தில் அ.சா.1 ராமசாமிக்கு நிலம் இருப்பதாகவும் அதை விற்க போவதாகவும் என்னிடம் சொன்னார். அந்த நிலத்தை பார்ப்பதற்காக 25.09.2010ம் தேதி காலை 10-10.30 மணி அளவில் நானும் கே.பி.ராசமாமியும், சுப்பிரமணியும், இன்னும் 2-3 பேரும் சென்றிருந்தோம். அப்போது நாங்கள் பார்க்க சென்ற இடத்திற்கு பக்கத்து இடத்துக்காரரான ஆஜர் எதிரி குமரவேலும், அவரது மனைவி வித்யாவும், அவரது அம்மா ருக்மணியும், குமரவேலின் சித்தப்பா காளியப்பனும் அவர்களது இடத்தில் இருந்தார்கள்.

2)அப்போது இந்த நால்வரும் நாங்கள் வாங்க சென்ற இடம் அவர்களது இடம் எனவும் எதற்காக நீங்கள் வாங்குகிறீர்கள் என சத்தம் போட்டார்கள். அப்போது குமரவேலும், அவரது அம்மா ருக்மணியும் தகாத கெட்டவார்த்தை பேசி சத்தம் போட்டார்கள். அப்போது குமரவேல் கையில் அரிவாள் வைத்து நிலத்திற்குள் வரக்கூடாது என்றும் மீறி வந்தால்

வெட்டிவிடுவேன் என்றும் மிரட்டினார். பின்னர் நாங்கள் வந்துவிட்டோம். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

வாய்ப்பளித்தும் இல்லை.

Signature of the Witness

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
பெருந்துறை.

JUDICIAL FORM NO.53

( See Rule 42)
Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
IN THE COURT OFJUDICIAL MAGISTRATE, PERUNDURAI

| | | | |
|---|---|---|---|
| Calendar | | C.C.No. | 112/2015 |
| Miscellaneous | | C.M.P.No | |
| Sessions | | S T C No. | |
| Deposition of witness for | PW6 | Prosecution /Defence / Court | |
| Name | T.A. Subramanaian | Caste | |
| Father's Name | Appachi goudner | Calling | |
| Village | Thiruvengadampalayam | Religion | |
| Taluk | Perundurai | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act 1969( Central Act 44 of 1969 ) of the day of 23.08.2022

<u>**முதல் விசாரணை**</u>

1)நான் மேற்கண்ட விலாசத்தில் குடியிருந்துகொண்டு நில புரோக்கராக வேலை பார்த்து வருகிறேன். அ.சா.1 டி.பி.ராமசாமியும், ஆஜர் எதிரி குமரவேலும் எனது ஊர்காரர்கள். 2010 ம் வருடத்தில் ஒரு நாள் தேதி சரியாக நினைவில்லை. காலையில் காஞ்சிகோயில் ரோட்டில் உள்ள அ.சா.1 ராமசாமிக்கும், ஆஜர் எதிரிக்கும் பாத்தியப்பட்ட இடத்தில் இருவருக்கும் அடிதடி தகராறு ஏற்பட்டதாக கேள்விபட்டேன். அடுத்த நாள் காலை 6.30 மணி அளவில் நான் சம்பவம் நடந்த இடம் வழியாக சென்றபோது பெருந்துறை போலிசார் அடிதடி தகராறு நடந்த இடத்திற்கு வந்து சம்பவ இடத்தை பார்வையிட்டு வரைபடம் வரைந்து எழுதிகொண்டிருந்தார்கள்.

2)அதற்கு என்னை சாட்சியாக இருக்கும்படி கேட்டுகொண்டார்கள். அதற்கு நானும் சரியென ஒப்புகொண்டு சாட்சி கையொப்பம் போட்டு கொடுத்தேன். என்னுடன் மற்றொரு சுப்பிரமணி என்பவர் சாட்சி கையொப்பம் செய்துள்ளார். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகசரில்

உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையதுதான். (**பார்வை மகசர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

வாய்ப்பளித்தும் இல்லை.

Signature of the Witness

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
பெருந்துறை.